


கோவை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் மற்றும் இணைப்பு சங்கங்களின் சார்பில் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, ஜனநாயக விரோத மத்திய மாநில அரசுகளை கண்டித்து 22.09.2026 அன்று கோவை, செஞ்சிலுவை சங்கம் முன்பு, தெற்கு வட்டாசியர் அலுவலகம் அருகில் நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கவுன்சில் தலைவர் ராக்கி முத்து தலைமையில் மாவட்ட கவுன்சில் செயலாளர் சிடிசி துரைசாமி, பேரவை இணை பொதுச் செயலாளர் பிரபாகரன், பொருளாளர் ராதாகிருஷ்ணன் மாநிலத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் இணைப்புச் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் மற்றும் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன்தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண்நேரு முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் டி.சி. பாஸ்கர், சன். சம்பத் ஒன்றிய கழக செயலாளர்கள் ம. ராஜ்குமார், தி. மதியழகன், செ. நல்லதம்பி, டாக்டர் செ. வல்லபன் மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் எஸ்.டி.ஜெயலட்சுமி, பூலாம்பட்டி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளது!

# தமிழ்நாட்டில் காவல்துறை செயல்படுகிறதா? இல்லை முதல்வரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப்.21-

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் செயலிழந்துபோயுள்ளது என்பதற்கு இந்தக் கொலைகள்தான் சாட்சி.



ஒவ்வொரு நாளும் தமிழ் நாட்டில் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. தமிழ் நாட்டின் Growth Rate-ஐ உயர்த்துவார்கள் என நம்பி வாக்களித்த மக்களுக்கு, தினமும் Crime Rate-ஐ உயர்த்தி தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பு அன்றாடம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும்போது, என்ன செய்து கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு? தமிழ்நாட்டில் காவல் துறை செயல்படுகிறதா? இல்லை அதுவும் முதலமைச்சரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

# புதிய தலைமைச் செயலகம் பட்டினப்பாக்கத்தில் அமைக்க கடும் எதிர்ப்பு!

## த.வெ.க. அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்!

சென்னை, செப்.21-

மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவுடன்தான் த.வெ.க. ஆட்சி நடைபெறுகிறது என்பதை அவர்கள் உணராவிட்டால், தங்களது முடிவு வேறு மாதிரி இருக்கும் என்று மாநில செயலாளர் பெ. சண்முகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மார்க்சிஸ்ட் கயம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சென்னை பட்டினப்பாக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, புதிய தலைமைச் செயலகத்திற்காக வெளியிடப்பட்ட அரசாணையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அப்போது பேசிய பெ.சண்முகம், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் விவகாரத்தில் தவெக அரசு ஆணவத்துடனும், பிடிவாதத்தோடும் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்று கூறினார்.

இதையடுத்து, செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், விஜய் கட்சிக்கு 34 சதவீத மக்கள்தான் வாக்களித்துள்ளார்கள் என்றும், தங்கள் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி நடைபெறுவதை அரசு உணரா விட்டால், தங்களது முடிவு வேறு மாதிரி இருக்கும் என்றும் எச்சரித்தார்.

### விண்ணை முட்டும் காய்கறி விலை!

# தமிழ்நாட்டில் அரிசி விலை கிடுகிடு உயர்வு!

## விலை உயர்வால் ஏழை எளிய மக்கள் கடும் பாதிப்பு!

சென்னை, செப்.21-

தமிழ்நாட்டில் அரிசி விலை 25 முதல் 30 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

த.வெ.க ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல், அதன் நிர்வாகச் சீர்கேட்டால், ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டின் பணவீக்கம் ராக்கெட் வேகத்தில் எகிறுகிறது.. அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி என அத்தியா வசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டுகிறது. இந்நிலையில், தமிழ்நாட்டில் அரிசி விலை 25 முதல் 30 சதவீதம் உயர்ந்துள்ளது.

சென்னையில் 26 கிலோ பொன்னி அரிசி ஆயிரத்து 800 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதேபோல் 26 கிலோ இட்லி அரிசி ஆயிரத்து 40 ரூபாய்க்கும், 26 கிலோ சன்னரக அரிசி ஆயிரத்து 600 ரூபாய்க்கும், 25 கிலோ பிராண்டு பொன்னி அரிசி ஆயிரத்து 450 ரூபாய் முதல் ஆயிரத்து 550 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது. அரிசி விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

### மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

# தி.மு.க. கூட்டணிக்கு அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகம் ஆதரவு!

## நிறுவனர் பி.கே.ரங்கநாதன் அறிவிப்பு!

சென்னை, செப்.21-

நடைபெறவிருக்கும் 2026 மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, ஆவடி பி.கே.ரங்கநாதன் அவர்களை நிறுவனர்/ தலைவராகக் கொண்ட அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாகவும் தெரிவித்துள்ளது.

### மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் உழைக்க வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

மைலம் செப் .21-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வதற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் உறுதிமொழி எடுத்து கடுமையாக உழைக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மற்றும் மயிலம் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் தீவனூரில் உள்ள மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள்

அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், விஜயராகவன், துரை, இளம்வழுதி, செழியன்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலைவகித்தனர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மதுராந்தகம் சட்டமன்ற இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும்கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் அவர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வதற்கான பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி , பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் தமிழரசன், செந்தில்குமார், மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், அன்பு செழியன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் சம்சுதீன், வெற்றிச்செல்வன், பழனி, நிர்மல் ராஜ், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழகத்தின் சார்பில் கழக வழக்கறிஞர் பரந்தாமனை வெற்றி வேட்பாளராக கழகத் தலைவர் மு. க .ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அந்த வகையில்மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற செய்ய வேண்டும் அதற்காக விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மைலம் சட்டமன்றத் தொகுதிக்கு தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டு

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அச்சரப்பாக்கம் ஒன்றியம் மாத்தூர், அகிலி, ஊனமலை, சிறுநாவலூர்ஆகிய ஊராட்சிகளில் கழகத்தின் நிர்வாகிகள் கடுமையாக களப்பணியாற்ற வேண்டும்.

அனைத்து வாக்குச் சாவடிகளில் உள்ள வாக்காளர்களிடத்தில் த.வெ.க அரசின்விலை ஏற்றத்தையும் இதனால் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைமைகளை எடுத்துக் கூறியும்,மக்கள் படும் கஷ்டங்களை விளக்கிக் கூறி வேண்டும்.

மேலும் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்டுள்ள எண்ணற்ற பல்வேறு திட்டங்களைஎடுத்துக் கூற வேண்டும்.

குறிப்பாக மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு வீடாக நேரில் சென்று வாக்காளர்களிடத்தில் எடுத்து கூறியும் கழக நிர்வாகிகள் வாக்காளர்களை சுமார் பத்து முறையாவது நேரில் சந்தித்து திமுக அரசின் சாதனைகளை கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க வேண்டும்,

த.வெ.க.வின்ஐந்து மாத கால ஆட்சியில்மக்களுக்கு செய்த துரோகத்தை வாக்காளர்களிடம் எடுத்துக் கூற வேண்டும்

குறிப்பாக ஒவ்வொரு வீட்டிலும் திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மதுராந்தகம்சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் பரந்தாமனை வெற்றி பெற செய்து கழகத் தலைவரிடம் மதுராந்தகம் வெற்றியை சமர்ப்பிப்பதற்காக கழக நிர்வாகி கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டு தீவிர பணியாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

### செப்டம்பர் 21 (2002)



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல்

# இரா.சிவா வாக்குச் சேகரிப்பு!

புதுச்சேரி, செப். 21-

தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வம் தட்டாஞ்சாவடி தொகுதியில் உள்ள தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் புடைசூழ தொகுதி மக்களை வீடு வீடாக சந்தித்து வாக்கு சேகரித்து வருகிறார். நேற்று பாக்குமுடையான்பேட் பகுதியில் வாக்கு சேகரித்த வேட்பாளர் சேது செல்வம், இன்று காலை தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட தாகூர் நகர் பகுதியில் திமுக அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அப்போது வாக்களர்களிடம் பேசிய அமைப்பாளர் இரா. சிவா, பொதுத் தேர்தலில் 2 தொகுதியில் போட்டியிட்டதையும், அப்போதே இடைத்தேர்தலில் அசோக் ஆனந்தனை வேட்பாளராக நிறுத்துவேன் என்று கூறியதையும் முதல்வர் இங்கு பிரச்சாரத்தில் பெருமையாக கூறியுள்ளார். உண்மை காரணம் என்னவென்றால் தனித்து நின்றால் முதல்வர் ரங்கசாமியால் வெற்றி பெற முடியாது. அவருக்கு அசோக் ஆனந்தனின் உதவி தேவைப்பட்டது. அதனால் அசோக் ஆனந்தனை இடைத்தேர்தலில் நிறுத்துவேன் என்று கூறி அவருக்கான வாக்கையும் பெற்றுக் கொண்டார். மேலும் அந்த சமயத்தில் அசோக் ஆனந்தனால் தேர்தலில் நிற்க முடியாத நிலை இருந்தது. அதனால் அசோக் ஆனந்தனும் ரங்கசாமிக்கு பிரச்சாரம் செய்தார். இதுபோன்ற தவறான பின்புலங்களை மறைத்து நியாயஸ்தர் போல் பிரச்சாரம் செய்கின்றனர்.

அசோக் ஆனந்தன் சட்டமன்ற உறுப்பினராகி சட்டமன்றத்தில் பேசி தொகுதியில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாம், அப்படியெனில் முதல்வரின் தொகுதி என்ற நிலையில் 20 ஆண்டிற்கு மேலாக இருக்கும் தட்டாஞ்சாவடி தொகுதியிலேயே ரங்கசாமியால் வளர்ச்சி ஏற்படுத்தவில்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார்.

அதுபோல் யாருக்கு வாக்கு அளித்தால் நல்லது என்று பார்க்க வேண்டும் என்று கேட்டு கொண்டுள்ளார். இதனை மக்கள் கண்டிப்பாக நினைத்து பார்த்து ஓட்டுப்போட வேண்டும். ஏனென்றால் புதுச்சேரி அரசு சார்பு நிறு வனங்களான பாப்ஸ்கோ, பாசிக் உள்ளிட்ட நிறுவனங்களில் தட்டாஞ்சாவடி தொகுதியை சேர்ந்தவர்கள்தான் பணி புரிந்து வந்தீர்கள். தற்போது அவைகள் மூடப்பட்டுவிட்டதால் வேலையிழந்து இருப்பதும் தட்டாஞ்சாவடி மக்கள்தான். எனவே நமது வேலை வாய்ப்பை பறித்தவர் யார்? அந்த கட்சிக்கு நாம் ஓட்டுப் போட வேண்டுமா? என மக்கள் சிந்தித்து வாக்கு அளிக்க வேண்டும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்

### செப்டம்பர் 21 (2020)



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “மா.மீ” என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். “எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**